DEPOSITION OF WITNESS
CHAPTER CODE OF CIVIL PROCEDURE
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, THENI.

# O.S. No. 77/2025

Deposition of Witness : P.W. 3

| | |
|---|---|
| Name - **திரு.சரண்ராஜ்** | Father's Name - **திரு.** |
| Village - | Taluk- |
| Caste - | Calling - |
| Religion - | Age- |

Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of the day of **13.02.2026**
(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை –**

1. இந்த வழக்கின் வாதி சிலம்பரசனை எனக்கு தெரியும் எனக்கு பிரதிவாதி செல்வராஜ்–ஐ தெரியும் மார்ச் மாதம் 29ஆம் தேதி, 2024 ஆம் வருடம் சிலம்பரசன், செல்வராஜ்க்கு பணம் கொடுப்பது சம்பந்தமாக என்னை சிலம்பரசன் அவரது வீட்டிற்கு அழைத்திருந்தார். காலை 10.00 மணிக்கு அவருடன் மற்றொருவர் இருந்தார்கள். காலை 10.00 மணிக்கு சிலம்பரசன் வீட்டிற்கு நான் சென்றிருந்தேன். நாங்கள் அங்கு சென்றபோது சிலம்பரசன், அவரது மனைவி, செல்வராஜ், உதயகுமார் ஆகியோர் இருந்தார்கள். ரூ.20 லட்சம் கொடுக்கல், வாங்கல் சம்பந்தமாக பேசிக் கொண்டார்கள். கடமலைக்குண்டுல் உள்ள ஒரு கடையிலிருந்து புரோநோட் வாங்கி வரச்சொன்னார்கள். அந்த புரோநோட்டை வாங்கி வந்தவுடன் என்னை எழுதச் சொன்னார்கள், அவர் சொன்ன விபரத்தை எழுதிக் கொண்டேன்.

2. சிலம்பரசன் ரூ.20லட்சத்தை செல்வராஜ்க்கு கொடுத்ததாக அந்த புரோநோட்டில் எழுதினோம். ராமராஜ் என்பவர் வருவதற்காக காத்திருந்தோம். அவர் வந்தபிறகு சிலம்பரசன் மனைவி சிலம்பரசனிடம் பணத்தை கொடுத்தார்.

சிலம்பரசன் செல்வராஜ் இடம் பணத்தை கொடுத்தார், அவர் வாங்கி அந்த பணத்தை எண்ணிப்பார்த்தார். சரியாக உள்ளதென சொன்னதன் பேரில் ரூ.20 லட்சம் இருந்ததை உறுதி செய்து கொண்டார். நான் எழுதிய புரோநோட்டை படித்துக் காட்டச் சொன்னார்கள், படித்துக் காட்டினோம். அதன் பிறகு செல்வராஜ் அந்த புரோநோட்டை வாங்கி பார்த்தார், செல்வராஜ் அந்த புரோநோட்டில் கையெழுத்து போட்டார் அங்குள்ள ராமராஜ், நான் கையெழுத்து போட்டோம். நான் எழுதியதும் சாட்சி என கையெழுத்து போட்டேன். மற்ற இருவர் சாட்சி கையெழுத்து போட்டார்கள் அவர்கள் ராமராஜ் மற்றும் உதயகுமார் சாட்சி கையெழுத்து போட்டார்கள். என்னிடம் காண்பிக்க கூடிய வா.சா.ஆ.1 – புரோநோட்டில் உள்ள எழுதியது மற்றும் சாட்சி என கையெழுத்து போட்டது நான் தான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN
Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.02.13 19:14:16 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.